R B N 9 / 567 / 64
Registered as a Newspaper in Ceylon

உ
சிவமயம்

விலை சதம் ·15

வருட சந்தா
இலங்கை இந்தியா - 5-00

சந்தா ஏஜன்ஸ்,
சம்பு இன்டஸ்றீஸ்
அரசிப்பாளையம், சேலம்-6

குடாநாட்டு வர்த்தக மாளிகை
பிரதான வீதி, சுன்னாகம்]
[இலங்கை]

LUXMI VILAS PRESS
83c, Victoria Street,
Durban, S. Africa

KALAIMAGAL
BOOK DEPOT
P. O. Box 1326,
Singapore.

# நாவலன்

**சைவ காவலன்**

மாதம் இருமுறை வெளிவரும் சைவ வெளியீடு

மலர் 8 | ஸ்ரீலங்கா சைவாதீனம் — இளவாலை — 1-9-69 சௌமிய ஆவணி - 16 | இதழ் - 4

# சைவமாணவர் படும் இன்னல்

## பலாலி ஆசிரியர் கல்லூரி விடுதியில்

இக்கல்லூரி மாணவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் சைவமாணவர்கள். இவர்களுள் 40 பேர் பரம்பரையான சுத்த போசனிகள். ஆரம்பத்தில் இக்கல்லூரி விடுதியில் சைவமாணவர்களுக்குச் சமயாசாரப்படியான போசன ஒழுங்குகள் சமையல் உட்பட வேருகவும், ஏனையோர்க்கு வேருகவும் வகுக்கப்பட்டிருந்தன. இப்போதைய அதிபர் இவ்வொழுங்குகளில் மாற்றம் செய்துள்ளமையால் சைவமாணவர்களுக்கு இன்னல் ஏற்படுவதாயிற்று. அவர்கள் தங்கள் சமயாசாரத்திற்கும் சுய திருப்திக்கும் ஏற்ற வகையில் விடுதியில் சுத்தபோசனம் பெற்றுக்கொள்ள முடியாது கஷ்டப்படுகின்றனர். இதனுற் தமது பாரம்பரிய சமயக்கொள்கைகளை கைவிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே என்று வருந்துகின்ருர்கள். பெரும்பான்மையான சைவமாணவர்கள் கல்வி கற்கும் இக்கல்லூரியில் சிறுபான்மை புறச்சமயிகளின் கொள்கைகளுக்கமைய வாழ்வதா நீதி? இப்பேர்ப்பட்ட கல்லூரியில் ஒரு சைவ அதிபரை அரசாங்கம் நியமிக்காது ஒரு கிறிஸ்தவ அதிபரை நியமித்ததையிட்டுச் சைவமக்கள் கவலைப்பட வேண்டியிருக்கிறது. இதுபற்றி அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை வித்தியாதிபதியுடனும் மற்றும் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகின்றது

இவ்விடுதியில் மாட்டிறைச்சிப்போசனமும் நடைபெறுவதாக அறிகின்ருேம் இது இப்பகுதியில்பசுக்களவும், பசுக்கொலையும் நடைபெறுவதற்கு ஊக்கமளிக்கும் ஒரு செயலாகும்.

அ. இ. சை. பா. சபை

## சைவாலய வழிபடுமுறை

**சி. நாகலிங்கம், தெல்லிப்பளை.**

திருச்சிற்றம்பலம்

அழுக்குமெய் கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான்படற் பால தொன்ருனல்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பனுகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கிவீழினுந் திருப் பெயரல்லால்
மற்று நான் அறியேன் மதுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒரு மருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊருறை வேனே.

திருவடிப்பிழைத்தலாவது சிவநிந்தை, வேதசிவாகம நிந்தை, அடியார் நிந்தை, குரு நிந்தை என்பவற்றில் ஈடுபடுதல் ஆகும். இவைகளுக்கு மன்னிப்பு இல்லையென்று சிவ நூல்கள் கூறுகின்றன.

அநாதி மலமுத்தசித்துருவாகிய சிவபெருமானே கடவுள் எனத் துணிந்தவர்களாய், சிவதீட்சைபெற்று ஒவ்வொருநாளும் ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துசந்தியாவந்தனம், சிவத்தியானுதிகளைச் செய்து, கொல்லாமை, புலாலுண்ணுமை, கள்ளாமை, கள்ளுண்ணுமை, பொய்பேசாமை பிறர்மனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, பொறை முதலிய நற்குணங்கள் உடையவர்களாய் ஒழுகுவோரே சைவ சமயிகள். இவர்கள் தினமும் ஸ்நானசந்தியாவந்தன முதலியவற்றைமுடித்துக்கொண்டு ஒவ்வொருநாளும், அல்லது கிழமைக் கொருநாளாயினும், அல்லது விசேடகாலங்களிலாயினும் ஆலயவழிபாடு செய்ய வேண்டும். ஆலயத்திற்குச் செல்லும்பொழுது தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் விதிப்படி கொய்யப்பட்ட மலர் முதலியவற்றை, தட்டத்திலாவது வேறு பாத்திரத்திலாவது வைத்துக்கொண்டு சிவபெருமானை மறவாத சிந்தையோடு தூய்மையாய்ச் சென்று திருக்கோபுரத்தையாவது, திருக்கோபிலையாவது கண்டவுடன் தியானமருவுணர்வுடன் சமீபித்து கை கால் முதலியவற்றைக் கழுவி புறமுன்றிலில் அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் மும்முறை செய்தல் வேண்டும். பின்பு வீதியில் சிவ நாமங்களை உச்சரித்துக்கொண்டு மும்முறை மெல்லவாக வலம்வந்து, வாய்தலின் முன் வீழ்ந்து வணங்கி துவார பாலகரையும், விநாயகக்கடவுளையும் வணங்கி, திருநந்தி தேவரிடமிருந்து ''பகவானே இறைவனைத் தரிசித்துவணங்குவதற்கு விடைதந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்துத் தோத்திரஞ் செய்து உள்ளே செல்லக் கூடிய வருணத்தவர்கள், திருச்சந்நிதானம் திருக்காப்பிடாத சமயம்; உள்ளே புகுந்து உட்பிரகாரத்தில் தென்கிழக்கு திசையில் நின்று விநாயகப் பெருமானை மும்முறை சிரசில் முட்டியாகப் பிடித்தகையால் குட்டித் தாழ்ந்தெழுந்து சுவாமி சந்நிதானத்தில் வந்து பலிபீடம்துவசஸ்தம்பத்திற்கு இப்பால் நின்று, உடல், பொருள் ஆவியெல்லாவற்றையும் பலிபீடத்தில் ஒப்புவித்ததாகப் பாவித்துக்கொண்டு இடபதேவருக்கூடாகத் திருமூலட்டானேஸ்வரரைத் தோத்திரஞ்செய்து வணங்கவேண்டும்.

(தொடரும்)

## சமயதீட்சை

அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச்சபையின் ஆதரவில் பின்வரும் கோவில்களில்கரணவாய் உயர் திருகை. திருஞானசம்பந்தக் குருக்களால் சைவமக்களுக்கான சமய தீட்சை அளிக்கப்படும். ஆவணி மீ 22-ந் திகதி (7-9-69) ஞாயிற்றுக்கிழமை சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவிலில் காலை 9-00 மணி தொடக்கம்

ஆவணி மீ 23-ந்உ (8-9-69) திங்கட்கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் காலை 9–00 மணி தொடக்கம் தீட்சை பெற விரும்புவோர் முறைப்படி திரு வே. சிவசிதம்பரம் (சூராவத்தை) அவர்களுடனும் திரு தி. ஆறுமுகசாமி (தெல்லிப்பழை) அவர்களுடனும் தொடர்பு கொண்டு வேண்டிய ஒழுங்குகள் செய்து கொள்ளவும்.

## வல்லிபுர ஆழ்வார் மகோற்சவம்

இவ்வாண்டு ஆவணி மாதம் 25-ந் திகதி (10-9-69) புதன்கிழமை மகோற்சவம் ஆரம்பமாகும் சென்ற ஆண்டில் உற்சவம் நடைபெருமையாற் சனிக்கிழமை (6–9–69) அதற்குரிய பிராயசித்தக்கிரியைகள் நடைபெறுமெனவும் திருவிழா நிகழ்ச்சிகளும் ஆலய வழிபாடும் யாதொரு விக்கினமுமின்றி வழமைபோல் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் தர்மகர்த்தாக்கள் தெரிவிக்கின்றனர்.

உ

## ஆசி

செந்தமிழும் மேலாஞ் சிவநெறியுஞ் செம்மைபெற
வந்தருளும் நாவலனின் வாய்மைவழி—தந்தொளிரும்
காவலன்போல் வேதநெறி காக்கும் கலைக்கதிராய்
நாவலனும் வாழியவே நன்கு.

—மகாவித்துவான் கா வேந்தனர்


# நாவலன்

மாதம் இருமுறை வெளிவரும் சைவக்காவலன்

மலர் 8 ] ஸ்ரீலங்கா சைவாதீனம் – இளவாலை — 15–8–69 [ இதழ் 4


# யாரைப் பின்பற்றுவது?

எவ்வெச் சமயத்துக்கும் பிரமாண புருஷர்களா யிருப்பவர் அவ்வச்சமய குருமாரே குருமாரெனினும், அவர்கள் தத்தமது அறிவியற் சூழ்நிலைக்கு உகந்தபடியோ, சுய அபிலாஷைகளுக்கு ஏற்றபடியோ, தமது செல்வஞ் செல்வாக்குகளை உத்தேசித்தோ பிரமாணங்களை மீறுதல் எந்தச் சமயத்திலும் இல்லாத தொன்றாகும். ஒவ்வொரு சமயகுருவும் தத்தஞ் சமய மூல நூலின்படியே சமயப் பிரமாணங்களை அநுட்டிப்பர். தவறின், சமய கௌரவத்துக்குப் பழுது விளைத்தவராவர்.

உலக சமயங்களுட்பெரும்பாலானவை சரித்திர மறிய அவ்வக் காலப் பகுதியிலே தோன்றியவை. இன்ன சமயம் இன்ன காலத்திலே இன்னாரால் இன்ன இடத்தில் ஆரம்பமாயிற்று என்ற அத்தாட்சி அவற்றுக்குண்டு. அச்சமயங்களே தமது மூல நூலின்படி சமயப்பிரமாணங் கொள்ளும் விஷயத்தில் அணுப்பிசகாமல் அதிகம் கண்டிப்பாக இயன்று வருதல் கண்கூடு.

அவைகளைப் போலாது, நமது சைவசமயம் சரித்திர மறியாதது. காலகணிதத்துக்கு அப்பாற்பட்டது அது அநாதி; தொடக்க மில்லாதது. அதன் மூல நூல்கள் வேதம் ஆகமம் என இரண்டு என்பது அகிலப் பிரசித்தம். ஆதி சமயங்களாகிய அவற்றுக்குப் பொருந்தும் அவ்வுண்மை அநாதி சமயமாகிய சைவத்துக்குப் பொருந்தாதென்று கூற யாரும் முன்வர மாட்டார்.

நமது சைவ சமய மூல நூல்கள் இரண்டில் வேதம் பொதுவகையாற் பிரமாணமாவது; ஆகமங்கள் சிறப்புவகையாற் பிரமாணமாபவை. சைவ ஆசாரம், அநுட்டானம் ஆலயசேவை அத்தனைக்கும் ஆதாரமும் பிரமாணமும் ஆகமங்கள் என்றால் ஆகமங்களேதான் எனவே, நமது குருமார்களாகிய சிவாசாரியர்கள் எதனைப் பிரமாணமாகக் கொள்ளுதற்குரியர்? என்ற வினாவுக்கு ஆகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளுதற்குரியர் என்பது ஆணித்தரமான விடையாகின்றது.

சமய ஆசார அநுட்டானங்கள் ஆலய சேவை என்பவற்றை நோக்கும்போது ஏனைய சமயங்களுக்கும் நமது சைவ சமயத்துக்கு மிடையே புலப்படத் தோன்றும் பெரியதோர் வேறுபாடுள்ளது. அதுவே 'ஆசௌசவிதி' எனப்படும். ஜனனாசௌசம், மரணாசௌசம் நித்தியா சௌசம் என ஆசௌசம் மூன்றுவகைப்படும். இந்த ஆசௌசங்களுள்ளவர்கள் ஆலய சேவையில் எப்படி ஒழுகிக்கொள்ள வேண்டும் என்ற விதி ஆகமங்களிலே தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் உள்ளங்கை நெல்லிக்கனி. தற்செயலாகப் புத்தி பேதலிப்பினால் அல்லது சித்தப் பிரமையினால் யாரேனும் அந்த விதியை மீறிவிட்டால் இன்ன இன்ன பிராயச்சித்தங்கள் அங்கே இடம்பெற வேண்டும் என்பதும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது.

உத்தரகாரணாகமம் சிவார்ச்சனா விதிப்படலம், பாதுகாராதனா விதிப்படலம், என்பவற்றிலும் சுப்பிரபேதாகமம் பிராயச்சித்தவிதிப்படலம் ஜாதிபேத விதிப்படலம் என்பவற்றிலும்பாஞ்சராத்திர ஆகமத்திலும் பிறவற்றிலும் அவ்விதிகள் கூறப்பட்டுள்ளன என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அவையனைத்தும் சைவாலய சேவைக்குப் பிரமாணங்களே என்பதை யாரும் தட்டிக்கழித்தலும் இயலாது.

இதன்வழி நின்று, இன்றைய நமது சைவாலயங்களிலே பணியாற்றும் சிவாசாரியர்களில் ஒரு பெரும் பகுதியினர் ஆகமங்கூறும் ஆசௌச விதியொழுக்கத்தை அப்படியே ஒப்புக்கொள்கின்றார்கள். எந்த ஆலயமும் இந்த விதிகள் மீறப்படுவதை அநுமதித்தல் கூடாது எனத் தம்மாலானவரை போதித்தும் சாதித்தும் வருகின்றார்கள். இவ்விதிகளை மீறி ஆலயப்பிரவேசம் போன்ற அநுசிதங்கள் (குற்றங்கள்) இடம்பெற்ற இரண்டொரு ஆலயங்களை அவ்வப்போதே கைகழுவிவிட்டுச் சென்ற மானம் மிக்க சிவாசாரியார்களும் இருக்கவே இருக்கின்றார்கள்.

இதற்கு நேர்மாறாக, சிவாசாரியர்களில் ஒரு சிலர், இவ்விதிகள் மீறப்படுவதை அநுமதிக்கின்றார்கள், மீறப்பட்ட ஆலயங்களில் அர்ச்சனைகள் உற்சவாதிகள் நடத்துகின்றார்கள்; இவ்விதிகளை உடைத்தெறிய முன்னிற்குஞ் சீர்திருத்தவாதிகளுக்கு உசாத்துணைவர்களாக ஒழுகிக் கொள்கின்றார்கள். இவர்களுக்குப் பிரசித்தி கொடுத்துத் தம் காரியம் நிறைவேற்றுவதற்காக அச்சீர்திருத்தவாதிகள் அளிக்கும் பாராட்டுகளையும் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கின்றார்கள். இவற்றின்மூலம் சைவப் பொதுமக்கள் புத்தியிலே ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்குகின்றார்கள்; உலகப் பார்வையில் சமயத்துக்குக் கௌரவக் குறைவை உண்டு பண்ணுகின்றார்கள்.

ஒரு அரசாங்கத்தின் கௌரவத்துக்குப் பழுதாக ஒருவர் நடந்தால் அது இராசத்துரோகம். ஒரு தேசத்தின் கௌரவத்துக்குப் பழுதாக ஒருவர் நடந்தால் அதுதேசத்துரோகம். அங்ஙனமாக ஒரு சமயத்தின் கௌரவத்துக்குப் பழுதாக ஒநுவர் நடந்தால் அது என்னாகும்? அது சமயத்துரோகமே என்று கூறயாரும் தயங்கவேண்டியதில்லை.

எனவே; சைவமக்கள் தம் சமய கௌரவத்தைப் பேணிச் சிவசாரியர் சொல்வழி நிற்க வேண்டியவர்கள். அது அவர்களின் சமயக் கற்புநெறி. சிவாசாரியர்களும் சமய கௌரவத்தைப் பேணி ஆகமங்களின் சொல்வழி நிற்கவேண்டியவர்கள் அது அவர்களின் ஆசாரியக் கற்புநெறி. எனினும்,

கற்புள்ள சிவாசாரியர் சொல்வழி நிற்குமளவில் மாத்திரம் சைவமக்களின் கடன் நிறைவேறியதாகாது. ஆகம நெறியை மீறிய சிவாசாரியர்களை உண்மை வழிக்குத் திருப்புவதும் அவர்கள் கடனேயாகும். ஏன்? தாம் பிழையாக நடப்பது மாத்திரம் அதர்மமல்ல. அடுத்தவர் பிழையாக நடக்கப் பார்த்திருப்பதும் அதர்மமேயாகும். இது நிறைமொழி மாந்தராகிய நாவலர் பெருமானின் மறைமொழியாகிய மகாமந்திரம் என்பதை உணர்தல் நம் கடன்.

15–8–69 தொடர்ச்சி

# சைவசமய சாத்திர ஆராய்ச்சி

—தொண்டர், காரைநகர்.—

தேவர்குறளும் திரு நான்மறைமுடிவும் மூவர் தமிழும் ஒருவாசகமென மூதாட்டியான ஔவையார் கூறியபடி தமிழ்நூல்கள் யாவும் வேத சாரங்களென்பது யாவரும்ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயமாகும்.

நுண்மைக் கருத்துக்களமைந்த வேதக் கருத்துக்களைக் குரு மூலம் கற்றுணராத ஒரு சில போலிகள் தான் தோன்றித் தம்பிரான்களாகப் புதுப்புதுக் கருத்துக்களைக் கூறிவருவதால் கேட்போரும் படிப்போரும் படுகுழியில் வீழ்வர்.

பார்ப்பனரிடத்துக் கொண்ட கோபத்தினால் நமது சமயத்துக்கு வரும் ஏதம் நோக்காது வடமொழி வேதாகமங்கள் சிவபிரானால் செய்தருளப்பட்டனவல்லவென்று வெளியிட்டு வருதல் எவ்வளவு அனர்த்தத்தை விளைவிக்கும் என்பதை உணரமாட்டார்கள்.

ஆன்மாக்கள் வினைக்கீடாக படிமுறையான கீழ்க் கீழ்ச் சமயங்களின்று மேன்மேற் சமயங்களில் வந்து பின்னர் பிரமச்சரியம் முதலிய நான்காச்சிரமதர்மங்களை இயற்றிப் பின் வேதங்களையுணர்ந்து பின் உபநிடதத்தின்விசேடார்த்தத்தை நன்றாகத் தெளிந்து, பிறவி

(6-ம் பக்கம் பார்க்க)

உ

திருச்சிற்றம்பலம்

# ஆனினம் ஓம்பலும், பயனும்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

எவ்விதமான பசளையுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மாட்டினுடைய சாணந்தான், பயிர்களுக்கு அதிகம் பிரயோசனத்தைக் கொடுக்கிறதென்று உலகத்திலுள்ள எப்பகுதியினராலும் நன்கு ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பண்படுத்தப்பட்டுச் சாணத்தினால் மெழுக்கிடப்பட்ட நிலம், கருஞ் சுண்ணத்தினால் (சீமெந்து) செய்யப்பட்ட நிலத்திலும் பார்க்கச் சயனத்திற்கும் சுகத்திற்கும் உகந்ததாய் இருக்கிறது. முற்றத்திலுள்ள புழுதியடங்கச் சாணங் கலந்த நீர் தெளிக்கப்படுவதுண்டு. நீர் அதிகமாக இறைக்கப்பட்டாலன்றிப்பயிர்களுக்கு நலனைக் கொடுக்காத ரசாயன உரத்திலும் பார்க்க, கோடைகாலத்தில் முற்றாக வற்றுகின்ற கிணற்றிலிருந்து இறைத்து விடப்படுகின்ற சொற்ப நீரினாலும் சம்பந்தப்பட்ட சாணம் பயிர்களுக்குக் கூடுதலான பிரயோசனத்தைக் கொடுக்கின்றது. நிலத்தை உழுங் கலப்பைகளையும் வண்டிகளையும் இழுப்பதற்கு எருதுகள் உதவுகின்றன. மின் வண்டிகள் வருமுன், மிகவுந் தோற்றத்தை உடைய எருதுகள் நெற்றியிற் குஞ்சம், கழுத்தில் வெண்டயம்' கொம்புகளில் குப்பி என்பவற்றினால் அழகாக அலங்கரிக்கப்பட்டு அழகிய பயண வண்டிகளையும் பார வண்டிகளையும் இழுக்கும் கண்ணும் மனமுங் களிப்படையக் கூடிய காட்சி எங்கும் மலிந்திருந்தது. வருடாந்த உற்சவங்களிற் சைவாலயங்களிலிருந்து, சில தேயங்களில் சுவாமி திருவுலாக்கொள்ளும் வெள்ளிரதத்தை, அலங்காரத்திலாவது, பருமனிலாவது, அழகிலாவது, ஒன்று மற்றதுக்கு விட்டுக் கொடுக்காத சோடி வெள்ளெருதுகள் முக்கிய வீதிகள் தோறும் இழுத்துக்கொண்டு ஆலயத்திற்குத் திரும்பிச் செல்லும் வரையும் காணிக்கைகளைச் செலுத்தி வழிபடுகின்ற சகல மக்களுடைய கண்ணும் மனமுங் களிகூர்ந் தயர்ச்சி யடையச் செய்யுங் காட்சி எவ்விதத்திலும் வரையறுக்க முடியாததாகும். சிவபெருமானுக்கு வாகனமாகவும் கொடியாகவும் விளங்குவது இடபம்.

பசுவின் சாணத்தை விதிப்படி அக்கினியில் தகித்து எடுக்கும் வெண்ணிற விபூதி, ஆன்ம மலத்தை (பசு, மலம்) எரித்துச் சிவத்துவப் பேற்றை அடைவதற்கு அறிகுறியாய் அணியப்படுவது. தாயில்லாச் சிசுக்களுடையவும் நோய் வாய்ப்பட்டவர்களுடையவும் உயிரைக்காக்கும் உணவு பசுவின் பாலாக இருக்கின்றது. ஆனகாரணத்தினால், தாயிலும் பார்க்கச் சிறந்த பசுவின் பெருமை திருத்தொண்டர் பெரியபுராணத்தில் பாராட்டிப் போற்றப்பட்டிருக்கின்றது. முப்பத்திரண்டு தர்மங்களைச் செய்த உலகமாதா பசுக்காத்தலை முதலாக வைத்தார். கிழமைக்கொருமுறை பசுத்தொழுவ மிருக்குமிடத்தில் தூபம் இட்டுக்கொள்ளவேண்டும். குளிக்கவார்க்கவேண்டும் சிவலோகத்திலே, சிவசந்நிதியிலே இடபம் இருக்கும். அதன் பக்கத்திலே நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவகைப் பசுக்கள் இருக்கும் இவை முறையே, கபில நிறமும், கருநிறமும். வெண்ணிறமும், புகைநிறமும், செந்நிறமும் உடையன. இவ்வைந்தும் சிவனது திருவருளினாலே, திருப்பாற் கடலிலிருந்து, சிவபூசையின் பொருட்டும் யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன.

இப் பசுவின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருக்குமாறு கூறுதும் :- பிரமாவும் விட்டுணுவும் கொம்பின் அடியில் இருப்பர். கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும் கொம்பின் நுனியில் இருக்கும். சிவன் சிரத்திலும், உமாதேவி நடு நெற்றியிலும், முருகக் கடவுள் மேல் நாசியிலும், நாகேசர் உள்நாசியிலும், அச்சுவினீ தேவர் இரண்டு காதுகளிலும், சூரியனும் சந்திரனும் இரண்டு கண்களிலும், வாயு பல்லிலும், வருணன் நாவிலும், சரஸ்வதி உங்காரத்திலும், இயமன் இருதயத்திலும், இயக்கர்கள் கெண்டைத் தலத்திலும், உதயாஸ்தமனசந்திகள் உதட்டிலும், இந்திரன் கழுத்திலும், அருக்கர்கள் திமிலிலும், சாத்தியர் மார்பிலும், அனிலவாயு நான்கு கால்களிலும், மருத்துவர் முழந்தாள்களிலும் நாகலோகத்தார் குரத்தின் நுனியிலும், கந்தருவர் குரத்தின் நடுவிலும், தேவமாதர்கள் மேற்குரத்திலும், உருத்திரர் முதுகிலும், வசுக்கள் சந்திகளிலும், பிதிர்கள் அரைப் பலகையிலும், சத்தமாதர்கள் பகத்திலும், இலக்குமி அபானத்திலும், நாகேசர் அடிவாலிலும் இருப்பர்.

சூரியனொளி வால்மயிரிலும், கங்கை மூத்திரத்திலும், யமுனை சாணத்திலும் இருக்கும்: முனிவர்கள் ரோமத்திலும், பூமிதேவி உதரத்திலும், இருப்பர்; சமுத்திரம் முலையிலும், காருகபத்தியம் முதலிய அக்கினி மூன்றும் முறையே வயிறு, இருதயம், முகம் என்னும் உறுப்புக்களிலும், யாகங்கள் எல்லா எலும்பிலும், சுக்கிலத்திலும் இருக்கும். கற்புடை மகளிர் எல்லா அவயவங்களிலும் இருப்பர்.

(தொடரும்)

# உலகம் போற போக்கைப் பார்.

— திரிலோக சஞ்சாரி —

அப்பாடா?

''தெய்வலோகத்திற்குப் போனேனோவில்லையோ? அங்கேஒரே அமர்க்களமாக இருந்தது. அது என்னடா என்று விசாரித்தேன், அவர்கள்என்ன சொன்னார்கள் தெரியுமா?''

ஓய் நாரதரே! நீர் பூலோகம் போயிருந்தீராமே. பூலோகத்திலே ஆலயங்களிலெல்லாம் வேத சிவாகமகங்களின்படி வைதீகக் கிரியைகள் செய்யக்கூடாதென்றும், தமிழிலே தேவாரம் படித்துத்தான் பூசை பண்ணவேணுமென்றும் அரசாங்க உதவியுடன் தடைகள் விதிக்க முயற்சி செய்து வருகிறார்களாமே விண்ணுலக வாசிகளுடைய அட்டைஸ்வரியங்கள் யாவும் வேண்டியதில்லையாமே. அவற்றை விஞ்ஞானமூலம் பெற்றுக்கொள்ள முடியுமாமே!

அதை என்னப்பா செய்வது! தேவாரமூலம் வைதீகக் கிரியைகளைச் செய்து வைக்க நவீன பூதேவ குருக்களையும் பூசகர்களையும் நியமித்து வருகிறார்கள். அப்படியென்றால் வருணாச்சிரம தர்மம் இயம நியமம் ஆசார அனுட்டானம் யாகாதி கருமங்கள் தீட்சை முறைகள், போன்ற சமய வரம்பில்லையென்றாய் விடுமல்லவா! என்ன செய்கிறது. கலியுக தர்மம் அப்படியாக நடந்து வருகிறது. அரசசேவையிலீடுபட்ட சில பல பெரியார்களின் வேண்டுகோளை மறுக்கமுடியாமல் ஆகமத்திற்கு மாறான காரியங்களைச் செய்து வருகிறார்கள். அதற்குப் பக்கபலமாகச் சமய சாத்திர வரம்பில்லாத போலிச் சபைகளும் ஆதரவளித்து வருகின்றன. ஆதீனகர்த்தர்களும் குருவாகவிருந்துகலியாண வைபவம் செய்யும்போது யாககாரியங்களான மந்திரமுறைகளுக்குத் தேவாரத்திலேயே அக்கருத்துக்களடங்கியிருக்கிறதெனத் தமிழிலேயே செய்து வருகிறார்கள். ஆகம வரம்பை மீறிக் கொடியேற்றிய குருக்களுக்கு இந்தியாவிலே நவரத்தின கண்டியணிந்து பொன்னாடையும் போர்த்தார்களாம். இலங்கையிலும் பல அசைவர்கள் உபசரணையும் செய்தார்களாம்.

சமய சாத்திர அனுபவத்தின் பின் அடையவேண்டிய சிவ வேடங்களைச் சமயசாத்திர அனுபவமில்லாதவர்களும் கௌரவம் பெற எண்ணி அணிந்துகொண்டு வேடம் பூண்டு துறவிகள்போல மடாதிபதிகளென்றும், தம்பிரான்களென்றும், சுவாமிகளென்றும் அடிகளென்றும் குருவில்லாத குருமார்களாகிச் சமயசீர்திருத்தம் செய்ய முனைகிறார்கள்!

'இறைவனருளிச் செய்த வேத சிவாகமங்கள் விளக்கம் பெறுவது இந்திரன் நாரதாதியாக விளங்கும் சப்த ரிஷிகள்வீணைவல்லோர். எண்ணரிய சித்தர் மனுவாதி வேந்தர் இருக்காதிமறை முனிவர்கள் அனுபூதிபெற்ற சாத்திரங்கள் என்பவற்றாலல்லவா அந்த மகிமையினாலல்லவா நாங்கள் விண்ணவர்கள் என மதிக்கப்படுகின்றோம். நாரதரே? நீர் இவற்றை எடுத்து அவர்களுக்கு விளங்க வைக்கவில்லையே.

என்னப்பா? நானா சொல்லாமல் வருவேன்? சொன்னேன். கலியின் கொடுமை, மாயையின் வலிமை அறியாமல் வந்த ஆணவத் திமிர் அவர்களைக் கேட்கவொட்டாமல் தடையாய் நிற்கிறது.

நாரதா! மறுமுறைசென்று அவர்களுக்கு எங்களுடைய சாபத்தைப் பெறவேண்டாமென்று சொல்.

அப்படியே ஆகட்டும்.

(தொடரும்)

## தமிழில் பூசை செய்வது சிவ அபராதம்.

அ. இ. அ. பா. சபை

குன்றக்குடியடிகளார் தமிழிலே பூசை செய்தல் வேண்டுமென்று சொல்லமுடியுமா? அப்படிச் செய்ய வேண்டுமாயின் சுருதி யுக்தி அனுபவத்திற்குப் பொருந்த வேண்டும். அப்படிச் செய்யலாமென்ற சுருதி எது என்று காட்டவேண்டும். யுக்திக்குப் பொருந்த முன்னேயுள்ள பெரியார்களில் இன்னார் இன்னார் இதைச் செய்துவந்திருக்கிறார்கள் என்று நிரூபிக்க வேண்டும். அனுபவத்திற்குப் பொருந்த அதிலே சில சித்திகளைச் செய்து காட்டவேண்டும். அப்போதுதான் கற்றோர் சபையில் செல்லுபடியாகும். அப்படியல்லாது தான் தோன்றித் தம்பிரான்களாகப் புதுபுதுக் கருத்துக்களைப் புகுத்த வெளிப்படுத்துவது சைவசமய ஆசாரிய மரபாகாது. ஔவைப்பிராட்டி என்ன சொன்னார்? 'கற்றோர் முன் கோணாமல் வாய்திறக்கக்கூடாதே' அப்படி வாய் திறப்பின் ''பேச்சுப் பேச்சென்னும் பெரும் பூனை வந்தாக்கால் கீச்சுக் கீச்சென்னும் கிளி''. என்றது போலாகிவிடும். அடிகளார் நாவலர் பிறந்த நாட்டில் சமய திருத்தம் செய்யப் புகுந்தமை அவருடைய அவைதிகக் கொள்கையைக் காட்டுகிறது. போலிச் சைவர் இங்கிருந்தால் இதற்கு ஏமாறக்கூடும். வைதீக சைவர்கள் மிக விழிப்பாகவே இருக்கிறார்கள். உ. வே அவர்கள் எழுதிய நூலொன்றில் யாழ்ப்பாணம் வித்துவான் கணேச ஐயர் 100 பிழை கண்டு காட்டியதால் அந்நூல் மீள அச்சிடப்பட்டதை அடிகளார் கேள்விப்பட்டிருந்தால் இலங்கை யாத்திரையை நாடியிரார். இங்கே ஒரு சிலர் அவரைப்போன்ற ஆட்கள் மூலம் கம்மியூனிசக் கொள்கையை இப்படி ஒரு சமயப் பூச்சில் உட்புகுத்த எண்ணுகிறாரா? அடிகளை ஒரு ஆளாக வைத்துப் பிரசாரம் செய்ய நினைக்கிறார்கள். சந்நிதானம் என்ற பதவியின் தகுதி அடிகளுக்கு விளங்காவிடின் அடிகளுக்கு சுருதியுக்தி அனுபவம் என்ற மூன்றும் பொருந்தச் சோபான முறைப்படி அதன் தர்மங்களை விளங்கவைப்போம். நாவலர் பெருமான் தேடித் தந்த அருமை பெருமைகளை அடிகளைப் போன்றவர்கள் அழிக்க அதற்கு இணங்கி நாவலர் வழிவந்த சைவமக்கள் ஏமாந்து போய்விடமாட்டார்கள். அடிகள் போக்கில் அப்படி ஏதும் உண்மையிருப்பின் நமது சபையுடன் வாதப்போரை நடத்திப்பார்ப்பது அவருக்குப் பெருமையாகும்.

## நவீன வேதாசலமவர்களே!

— காரைநகர்த் தொண்டர் —

நீங்கள் செந்தமிழ் செழித்து வேதசிவாகம ஞானத்திற் சிறந்து சைவசமயப் பண்பில் ஊறித் திளைத்த இந்த யாழ்ப்பாண நாட்டிற் சைவநெறிக்கு மாறான முறையிற் பிரசாரங்கள் செய்து வருகிறீர்கள். எங்களுடைய சமயத்திலேயிருக்கின்ற கட்டுப்பாடான ஒழுக்கம் யாவும் நிர்மலரான இறைவனாலே சொல்லி வைக்கப்பட்டவை மனித சக்திக்கு அப்பாற்பட்டவை. ஞான காண்டம் கர்ம காண்டம் பக்தி காண்டம் என்ற வேத அமைப்பின் வழியே அனுசரிக்கப்படும்' அருவ வழிபாடு ஞான சாதனை என்றும் அருவுருவ வழிபாடு மந்திர கிரியாமுறையான வழிபாடென்றும் பக்தி வழிபாடு தோத்திர முறையான உருவ வழிபாடென்றும் நீவிர் விளங்கவேண்டும். இந்த மூன்று வழிபாடும் வேத வழிபாடுதான். ஆனால் கற்கும் முறையும் வழிபடும் முறையும் ஒன்றுபோலல்ல. உருவ வழிபாட்டைப் புராண இதிகாசங்கள் திருமுறைகள் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் மூலம் கற்க வேண்டும். அவற்றினால் அர்ச்சித்து வழிபடவேண்டும். அருவுருவமான அருள்திருமேனியை மந்திர முறையால்தான் வழிபடவேண்டும். இது வேத விதி. இப்போது வேதத்திற்கு மாறாய் நிகழும் தமிழ் மந்திர பூசைகள் விளங்காத பூசைகள்; விதிமுறை இல்லாத பூசைகள் இதைச் சரியெனப் பேசுவோர் இறைவனது மந்தித் திருமேனியின் மாண்பினை அறியாதவர்ள். இவர்கள் ஒருவேளை சாத்திரங்களைப் படியாதவர்கள் ஆங்கில மூலம் சைவம் படித்தவர்களாயிருக்கலாம். இவர்களால்தான் இப்போது சமயத் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. மூன்றாவது பூசை இறைவனது அருவத்திருமேனிக்கு நிகழும் பூசை அது ஞான வழிபாடு. அருவத் திருமேனியைத் தத்துவ ஞானிகள்தான் காணமுடியும். அவர்கள்தான் அதைப் பூசிக்க முடியும். இப்படி மூன்று பூசையும் மனிதனுக்கேயுரியது. மனிதன் பிறப்பினாலும் உயரலாம். தீட்சையாலும் உயரலாம். எதற்கும் குருவையடைந்து படித்தாலன்றிக் கைவல்யம் கைகூடாது.

நவீனவேதாசலமவர்களே! நீங்கள் இவ்வுண்மையைச் சற்றுமுணராது நீங்கள் பேச்சுவன்மையால், அதிகாரிகளின் செல்வாக்கினால், சிலபல மதிப்புகளை மட்டும் பெற்றுக்கொண்டு சாஸ்திரங்கள் படியாமல் மேடைகளிற் பாய்ந்து பாமர மக்களின் நம்பிக்கையை வேட்டையாடுவது பாபச் செயலாகும். சமயக்கட்டுப்பாடுகளையழிக்க அரும்பாடுபடுகிறீர்கள். இதற்குச் சார்பாகப் போலிச் சாமிகளையும் துணைகொண்டு உங்கள் போலிக் கருத்துக்களை பொது சனங்கள் நம்பும்படி செய்கிறீர்கள். வடமொழி வேத சிவாகமம் ஆரியர் கொண்டு வந்தவை, புராணங்கள் சாக்கடை நீர். ஆரியர் கட்டி வைத்த பொய் மூட்டைகள் என்று கூறிப்பள்ளி மாணவர் உள்ளத்தினைப் பழுதாக்கி நாட்டிலே நாத்தீகம் பரவச் செய்கிறீர்கள். அதனால் இன்று மாணவர் நிலையில் ஏற்பட்ட சீர்கேட்டையும் நேரே காணுகிறீர்கள். ஆதலால், இவ்வளவிலாவது உங்கள் போலிப் பொய்ப் பிரசாரங்களை நிறுத்தி நடைமுறையிலுள்ள சைவத்தைத் தன்மானத்தோடு வாழவிட்டுவிடுங்கள். எனத் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

## தீண்டாமை ஒழிப்பு.

— வே. சிவசிதம்பரம் —

வேதாகம முறைப்படி அநாதியாக நடைபெற்று வரும் கோவில்களில் நாம் ஏன் தீண்டாதார் உட்சென்று வணங்குவதை மறுக்கிறோம். ஏதும் காரணமில்லாமல் மறுக்கமாட்டோம். முற்காலத்தில் பக்த நந்தனாரே திருப்புன்கூரில் உட்சென்று வணங்காது வெளியில் நின்றனர். அவர் வெளியில் நின்றே எம்பெருமான் மேல் பாட, எம்பெருமான் நந்தியை மறைக்காமல் இருக்கும்படியாக மறுபக்கமாகத் திரும்பும்படி செய்தார்.

'கோவில்கள் இருக்குமிடம் புனிதமாய் இருக்கவேண்டியது எல்லாருக்குமே தெரிந்த ஒரு விஷயம். நாம் எவ்வளவு புனிதமாய்க் கோவில்களின் நித்திய நைமித்திய பூஜைகளை நடாத்திப் புனிதத் தன்மையைக் காப்பாற்றிவருவோமோ அவ்வளவிற்கு அச் சுற்றாடலில் உள்ளவர்கள் நோயின்றி, அஷ்ட ஐஸ்வரியத்தோடு நல்வாழ்வு வாழ்வார்கள் என்பதற்கோர் ஐயமில்லை. அச்சுற்றாடலில் அகாலமரணம், பிள்ளைப் பேறின்மை என்பன குறைவடையும். கால மழை ஒழுங்காகப் பெய்து, பயிர்கள் செழித்து ஓங்கி வளரும்.

உயர்சாதியினர் கோவிலில் பூஜை செய்யும் குருமார் உட்பட-ஜனன மரண ஆசௌச காலங்களில் வெளியே நித்திய ஆசௌசமுள்ள தீண்டாதோர் நிற்குமிடங்களில் நின்று வணங்குவார்கள். இவைகள் யாவும் .தேச வழமையாயிற்று.

ஒவ்வொரு சாதியினருக்கும் நாட்டுப் புறங்களில் கோவில்கள் உண்டு. அவர்கள் தங்கள் தங்கள் கோவில்களைப் பரிசுத்தமாய் வைத்து உயர் சாதியினரின் முறையைப் பின்பற்றி நடப்பார்களேயானால் அவர்கள் கோவில்களின் சுற்றாடலில் வசிப்பவர்கள் நல்வாழ்வு வாழ்வார்கள்

கடவுள் என்று ஒருவரில்லை என்பவர்கள்தான் 'கடவுளுக்கு முன்னே மனிதர்ராயுள்ளோர் எல்லோரும் சமம்' என்று சொல்லிக் கோவில்களின் புனிதத்தன்மையையழித்துச் சனங்களின் நல்வாழ்வைக் கெடுக்கக்கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். இவர்கள் கடவுளைப் பயபக்தியோடு வணங்குபவரல்லர்.

தீண்டாதார் பயபக்தியோடு அன்றும் இன்றும் அவர்களுக்கென்றே குறிக்கப்பட்ட இடத்தில் நின்று வணங்கிப் பலன்பெற்று வருகிறார்கள்.

புனிதமாய், வேதாகம முறைப்படி நடக்கும் கோவில்களைத்தவிர ஏனைய கோவில்களிலோ. பஸ் வண்டிகளிலோ, புகைவண்டிகளிலோ, வேறு வாகனங்களிலோ, பள்ளிக்கூடங்களிலோ, உத்தியோகத் தலங்களிலோ, விளையாட்டுக் கழகங்களிலோ, பட்டணங்களிலுள்ளதேனீர்க் கடைகளிலோ, சாப்பாட்டுக் கடைகளிலோ, சலூன் முதலாய இடங்களில் தீண்டாமை முற்றாகவே நீங்கிவிட்டது. வேதாகம நெறியில் இயலுஞ் சைவாலயங்கள் இவற்றைப்போல்வன அன்று என்பதை எவரும் ஒத்துக் கொள்வர். சலூனுங் கோயிலுஞ் சமமென்று சொன்னால் சைவ மக்கள் எந்தவொரு நிர்ப்பந்தத்தின் கீழும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்

# நவீன குருமார்களே!

— காரைநகர்த் தொண்டர் —

சைவ சமயத்தில் ஆதி சைவர் மரபில் பிறந்துள்ள தாங்கள் சைவாகமத்திற்கு மாருக நடக்க உரிமையற்றவரென்பதை முன்னிட்டு சைவ சமய மேற்சபை (வேதாகம சைவ சித்தாந்த சபை) தாங்கள் விட்ட பிழையைத் திருத்தும் நோக்கமாகத் தங்களைக் கட்டுப்படுத்த முடியுமென்பதைத் தங்களுக்கு ஞாபகப் படுத்துகிறோம்.

வேதத்திலுள்ள கர்ம காண்டப்பகுதிக்குச் சரியாயமைந்த சிவாகமத்தின் பொருளான இறைவனை ஆலயத்தில் கும்ப விம்ப தம்பங்களில் வரவழைத்து மக்களுக்கு அனுக்கிரகம் செய்யும்படி செய்யவும், மந்திர யந்திர தந்திர முறைப்படி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து இறைவனை விம்ப மூலம் வெளிப்படுத்தி மக்களுக்கு அருள் புரியச் செய்யவுமே பூசகரையும் ஆசாரியரையும் மக்கள் அதிகாரம் கொடுத்துக் கோவிலில் நியமித்துள்ளார்கள். அதற்கமைய அவர்களும் வேதாகம முறைப்படி பிரதிஷ்டை கும்பாபிஷேகம், கொடியேற்றம் பிராயச்சித்தம் வரையும் செய்து வரவேண்டும். இந்த முடிவுகள் மனிதர்களுடைய முயற்சியால் அமைந்தவையல்ல; அதுபோல மனிதமுயற்சியால் மாற்றக்கூடியவையுமல்ல என்பது சமய முடிவு இம்முடிவுகளை மாற்றப் பலவரசர்கள் தோன்றியும் முடியாமல் இவை பலகற்ப காலமாக நிலைபெற்று வருகின்றன. காலபேதத்தால் சமய ஒழுங்குக்கு முரணுன தொல்லைகள் அரச அதிகாரத்தால் வரலாம். அச்சந்தர்ப்பங்கள் உங்கள் உண்மை நிலையை உரைத்துப் பார்ப்பதற்கு வாய்த்த உரைகல் என்பதை நீங்கள் மறுக்க முடியாது. அன்றியும் அப்படியான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இருந்து சமயத்தையும் உங்களையும் பாதுகாக்கத்தானே மேல் சபைகள் இருக்கின்றன. குருக்கள்மார் சபை, வேதாகம சைவ சிந்தாந்த சபை இரண்டும் பொறுப்புள்ள சபைகளன்றே! இந்த இரண்டு சபைகளுடைய வேண்டுகோளையும்செவிமடுக்காது சில அரசியல் பெரியோரின் அநுதாபம் பெறுவதற்காக ஆகமத்திற்கு மாருக இலங்கையில் ஆலயப் பிரவேசம் செய்த கோவிலில் நீங்கள் ஆசாரியராகவிருந்து கொடியேற்றி விழாவெடுத்தது கந்த புராணத்திலே தக்கனுனவன் இறைவனுக்கு அவிப்பாகம் கொடாமல் யாகம் செய்தது போலத்தானே! தர்கன்வேதாகமத்திற்கு மாருய் நடந்ததும் ததீசி முனிவர் நியாயத்தை எடுத்துரைத்தும் தக்கன்கேளாதொழிந்து அவன்பட்ட கேவலமும் உலகமறியுமே! வேத நிந்தை செய்வோருக்கு கந்த புராணம் தெளிவாகப் புத்தி புகட்டியமை உங்களுக்கு இன்னும் விளங்காமற் போனதேனே? எங்கள் சபைப் பிரசுர மூலமும் குருக்கள்மார் சபை மூலமும் எடுத்துச் சொல்லியும் நீங்கள் உணரவில்லை. உங்களால் உங்களுடைய சமூகத்திற்கும் சைவ உலகுக்கும் எவ்வளவு பரிசுகேடு விளைந்துள்ளதென அறிவீர்களா? சமயப் பற்றில்லாத பத்திரிகைகள் இவ்வளவு காலமும் வேண்டிய மட்டும் சமய நிந்தனைகளை வெளியிட்டன. அவற்றை மறுத்தெழுத எங்களிடையே ஒரு பத்திரிகையுமில்லாமையே இவ்வளவுக்கு நாஸ்திகம் வாலாட்ட வாய்ப்புக் கொடுத்தது கந்தனருளால் 'நாவலன்' தோன்றிச் சமய கோளரியாக வெளிவந்துள்ளான். 'நாவலன்' நாவன்மையும் சாஸ்திர ஞான வன்மையுமுள்ளவன் என்பதை இனிச் செயலிற் காட்டி வருவான். ஆனபடியால் காலந்தாழ்த்தாது தாங்கள் வேத விற்பன்னரென்ற மகிமைக்கேற்ப உங்களுடைய கௌரவம் குன்ருமல் உங்கள் விபரீதப்போக்குகள் சரியானவையெனில் ஆகமப் பிரமாண ஆதாரங்களுடன் அவற்றை நிரூபித்து இப்பத்திரிகை மூலம் அறிக்கை விடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(தொடரும்)

# சைவ அபிமானிகளே! ஒரு வேண்டுகோள்!

எங்களுடைய சமயப் பத்திரிகைக்கு (நாவலன்) உடனே சந்தாதாரர்களாகச் சேருமாறு சைவமக்களை அன்புடன் வேண்டுகிறோம். அதனுல் சைவத்தைப் படிக்கிறீர்கள் சைவத்தை வளர்க்கிறீர்கள். இரண்டு பகுதியிலும் நன்மையே செய்கிறீர்கள் என்பதை நினைவிற் கொள்ளவும்.

# திருக்கோவில் மகோற்சவதாற்பரியம்.

சி. நாகலிங்கம், தெல்லிப்பழை.

துவசஸ்தம்பம் – பதியைக் குறித்தல்
துவசம் (கொடிச்சீலை) – பக்குவான்மாவைக் குறித்தல்
துவசம் ஏற்றும் மஞ்சட்கயிறு – திருவருளைக் குறித்தல்
துவசத்தைச் சுற்றும் தெற்பைக் கயிறு - மலபாசத்தைக் [குறித்தல்

பக்குவ ஆன்மாவைப் பதியுடன் லயிக்கச் செய்தலைக் குறித்தலே துவசாரோகணம்.

1. முதனுட்டிருவிழா — தூல தேகத்தை நீக்கல்
2. இரண்டாம் நாட்திருவிழா — தூலசூக்கும தேகங்களை நீக்கல்.
3. மூன்ரும் நாட்திருவிழா — மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் ஆகிய ஏழையும் ஒழித்தல்.
4. நான்காம்நாட்டிற்றிருவிழா — நாற்கரணம், நால்வகைத் தோற்றம் நீக்குதல்.
5. ஐந்தாம்நாட்டிருவிழா — புலன்விழியே செல்லும் பஞ்சப்பொறிகளும், பஞ்சாவத்தைகளும், பஞ்சமலங்களும் நீங்குதல்.
6. ஆரும்நாட்டிருவிழா — காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும் அழித்தல்.
7. ஏழாம்நாட்டிருவிழா — எழுவகைப்பிறப்பும், கலாதியேழும், மாயாமலகுணமேழுங் கடத்தல்.
8. எட்டாம்நாட்டிருவிழா — தன்வயத்தனுதல் முதலிய கடவுட் குணங்கள் எட்டினையும் விளக்குதல்.
9. ஒன்பதாம் நாட்டிருவிழா — சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் என்னும் வடிவம் மூன்றும் சிருட்டி முதலிய முத்தொழிலும், தன்மை முதலிய மூன்றிடத்திருத்தலும் இல்லையெனல்.
10. பத்தாம்நாட்டிருவிழா — அனுக்கிரகத்தைக் குறிக்கும். இதன் காரிய விரிவுகளைவிம்பதந்திரம் என்னும் உபாகமத்திலே அறிந்துகொள்ளலாம்.

மகோற்சவ காலத்திலே பகற்காலத்திலே மாத்திரம் ஒருவேளைப் போசனஞ் செய்து, காமக்குரோதிகளாற் பங்கமுருமல் பாதுகாத்து விரதம் அனுட்டித்தல் வேண்டும்.

பயிர் விளைவிக்க வேண்டிய நிலத்தில், மரவேர், கல் முதலியனவற்றைக் கிளறி எடுத்து அப்பாற்போக்கி, உழுது பண்படுத்தி, பசளையிட்டு நான்குபக்கமும் வேலி கோலி, வித்திட்டு, நீர்ப்பாய்ச்சி, மிருகம் பறவை முதலியவை பயிரை அழிக்காமல் பாதுகாத்து விளைவுபெறுந்தன்மை போல், நெஞ்சகத்தினின்றும் வஞ்சகம், அழுக்காறு முதலியவற்றை அகற்றி ஒத்த பண்பினையுடைய அடியார், நடுவேயிருந்து, தவமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் வித்தையிட்டு, அது பயிராகும் வரையும், மாயாகாரியமாகிய தீய மிருகம் பறவையணுகாவண்ணப் காத்து சிவமாகிய விளைபோகத்தை யனுபவிப்பவர்கள் நான் எனதென்னும் அகங்காரம் மமகாரங்கள் நீங்கப் பெற்ற சித்தசுத்தியையுடைய மெய்யன்பர்கள்பர்கள் ஆவர்

# நாவலர் வந்துவிட்டார் உயிர் கொடுப்போம்.

முற்றெடர் மு. கந்தையா, ஏழாலை.

'நம்மை ஏமாற்ற முடியாது, நாம் விழிப்பாய்த்தான் இருக்கின்றோம்' என்ற நாவலர் கூற்று மிகவும் அர்த்த புஷ்டியானது. இன்றைய காலச் சூழ்நிலையிலே நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நமக்கு நீதியுரைப்பது; போதனை புரிவது; நம்மாலாகவேண்டிய சமய கலாச்சார இயக்கங்களுக்கு நல்லதொரு போதக வாக்கியமாக (Motto) நாவலர் பெருமானுடைய இலட்சியத்தின் இலட்சினை (முத்திரை) யாக இலங்குவது. உபநிடத மகா வாக்கியங்கள் என்பது போல **நாவலர் மகா வாக்கியம்** என்று போற்றக்கூடிய அந்தஸ்து இந்தவாக்கியத்துக்குளதாகும்.

அது ஏன் அப்படியெனிற் கூறுதும் நாவலர் நூற்றுண்டு காலமாகிய இந்தக்காலச்சூழலை நமது கருத்து நிகழ்ச்சிக்கு இடமாக எடுத்துக்கொள்வோம். நாவலர்சில விஷயம்

(6ம் பக்கம் பார்க்க)

# நாவலர் வந்துவிட்டார் உயிர்கொடுப்போம்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்ட அந்நாளிலிருந்து இந்நாள் வரை நமது தினசரிகள் தாங்கி வந்த அறிஞர் அபிப்பிராயங்களோ அனந்தம். அனைத்தும் நம் வாசக நேயர்கள் அறிவார்களாதலின் அவர் பெயர் சுட்டியோ இடஞ்சுட்டியோ காட்டப்பட வேண்டுவன அன்றாம். அவையனைத்தும் இந்நிலத்துச் சைவத்தமிழ் மக்களை இயன்ற மட்டும் ஏமாற்றும் பாணியிலேயே வெளிவந்துள்ளன என்பதொன்றே இங்கு சுட்டியுணரப்பட வேண்டியதாகும்.

நாம் முற்றொடரில் குறிப்பிட்டவாறு இன்று நம் நாட்டிலே வந்து நம்மை அடிமைப்படுத்தி வைத்துக்கொள்ளும் அந்நிய சக்திகள் அனந்தம். காந்தீயம், சோஷலிசம், சமத்துவம் முதலாக அச்சக்திகள் வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினவாகி நம்மிடையே பரவிக் கிடக்கின்றன. இவற்றினால் விளையும் மயக்கத்திற்குப் பாமரர்கள் அவ்வளவு ஆட்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால், பண்டிதர்களோ பெரும்பான்மையும் இதற்காட்பட்டுப் போன பரிசு கேட்டை என்சொல்வது!

'வடபகுதியில் மக்கள் மனக்கதவுகள் திறக்கப்படவில்லை, ஆலயக்கதவுகள் இன்னும் திறக்கப்படவில்லை, இந்நிலை நாவலருக்குச் சிலையா? இப்படியொரு கருத்து வெளிப்பாட்டைக் காணும் துர்ப்பாக்கியம் வாசகநேயர்களின் கண்களுக்கு ஏற்படவே செய்தது பத்திரிகை விபரத்தின் பிரகாரம் இக்கருத்து வெளியீட்டாளர் இந்நாட்டுப் புலவர்களுக்குள் மணியனையர். அஃதன்றியும், நாவலர் பெருமான் இந்த யாழ்ப்பாணத்திலே எந்தவொரு சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்துள்ளாரோ அந்த ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையிலே கற்றுப்பாண்டித்தியம் பெற்றுள்ளவர், அவ்வகையால், தமது கல்விஞான பரம்பரை நாவலர் பரம்பரையென உரிமை பாராட்டுந் தகைமையும் ஓரளவிற் பெற்றவர்,

இவர் கூறும் மனக்கதவு திறத்தல் ஆலயக்கதவு திறத்தல் விஷயங்கள் வேறு. அவற்றின்மேல் நமக்கு ஆராய்ச்சியில்லை, ஆனால், ஆலயக்கதவுகள் திறக்கப்பட்ட ஒரு சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் நாவலர் சிலையமைதற்கு ஏற்ற சூழ்நிலையென்றோ, அவை திறக்கப்பட்டிருத்தல்தான் நாவலர் குறிக்கோளென்றோ இவர் கருதியமைக்குக் காரணம் யாதாயிருக்கலாம்? ஆதாரம் எதுவாயிருக்கலாம்?

நல்லை நகர் நாவலர்பெருமானுடைய பிரசுரங்களோ, பிரசங்கங்களோ, நூல்களோ எவற்றிலாயினும் இவர் இதற்கு ஆதாரங்கள் கண்டிருத்தல் முடியாது என்பது நிச்சயம் அவை எவ்வகையிலும் இவர் கருததுக்கு காரணமாயிருந்திருக்க முடியாது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்! சைவப்பிரகாச வித்தியாசாலை இவருக்கு இதனைப் போதிக்குமோ என்னில் அதைப்பற்றி உலகம் அறிந்த அளவுக்கு அப்படியும் நடந்திருக்காது என்பது முக்காலும் நிச்சயம்! இதற்கு நேர் எதிராக, நாவலரைச் சார்த்தி அப்படிக் கருதுதல் நாவலர் கருத்துக்கு நேர் விரோதம் என்பதை நாவலர் எழுத்துக்களின் மூலமே நிருபித்தற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. ஞாபகத்துக்காக, நாவலர் நான்காம் பாலபாடத்தையும், நந்தனார் குசனத்தையும் குறிப்பிடலாம். எனவே இவ்வறிஞர் வாயிலாக இக்கருத்து வெளிப்போந்தமைக்குக் காரணம் முற்றிலும் வேறேயென்பது அருத்தாபத்தி நியாயத்தினால் அப்படியே பிரகாசமாகின்றது. என்னை? நவீன சோஷலிசக் கருத்தினால் இவ்வறிஞர் ஆட்கொள்ளப்பட்டமையே அதற்குக் காரணம். அதில் லவலேசமும் ஐயத்துக்கிடமில்லை. அதற்கு அவர் ஆட்பட்டது பற்றியும் நமக்குக் கவலையில்லை. ஆனால், அதே ஆளடிமைத்திறத்தின் பிரபாவத்தினால், சைவத்தமிழ்ப் பொதுமக்களாகிய நம்மை ஏமாற்ற முனைந்திருக்கின்றாரே என்பதுதான் நம் கவலை, புராதனமான சைவத்தையும் நாவலரையும் தமது நவீனத்தினால் மூடி மறைக்க முயன்ற இவர் நாத்திகமே நாத்திகம்!

இவ்வறிஞருடைய இக்கருத்து வெளியீட்டின் பின்னணியாய்க் கிடக்கும் இவரது அசல் நம்பிக்கையொன்றை இங்கே நாம் கவனிக்கத் தவறிவிடுதல் ஆகாது. அறிஞர் நிலையினராகிய அதுவும் புலவர்கள் மணியாகிய தாம் சொன்னால், அனைத்துமக்களும் ஏமாற வேண்டியது தானே என்ற நம்பிக்கை அதனூடே சுடர் விடுகின்றது. ஆதலால்தான் மீண்டுஞ் சொல்கின்றோம் நம்மை ஏமாற்ற முடியாது. நாம் விழிப்பாய்த்தான் இருக்கிறோம் வாழ்க இவ் மகா வாக்கியம். நாவலர் வாக்கியம்.

(தொடரும்)

# பாலஸ்தாபனம்

ஓர் ஆலயத்தில் மூலஸ்தானக் கடடடத்தில் பழுதுகள் ஏற்பட்டிருந்தாலும் அல்லது அவ்வாலயத்திற் கும்பாபிஷேகம் நடைபெற்றுப் பன்னிரண்டு வருடங்கள் சென்று விட்டாலும் ஜீரண உத்தாரணம் செய்யும் பொருட்டு மூல மூர்த்தி முதற்கொண்டு சண்டேஸ்வரர் ஈறாக உள்ள எல்லா அசல மூர்த்திகளையும் அவ்வாலயத்துட் சிறிதாக அமைக்கப்பெற்ற பால ஆலயத்திற் தாபித்தலே பாலஸ்தாபனம் எனப்படும். இவற்றிற்கு ஆதாரமாயுள்ள ஆகமங்கள் காமிகம், உத்தரகாரணம், சுப்பிரபேதம் என்பன. பாலஸ்தாபனம் நடைபெறுங் கால் விதிக்கப்பட்ட கிரியைகளும் தவறின்றி நடைபெறுதல் வேண்டும்.

மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்படும் கால் அவற்றின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கும் இயந்திரம் முதலியவற்றையும் அவ்விடத்திலிருந்தெடுத்து தக்க பாதுகாப்புடன் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

பாலாலயங்கள் இருவகைப்படும். முதலாவது, ஆலயமில்லாதவிடத்தில் புதிதாக ஓர் ஆலயம் தாபிக்குங்கால் மூலாலயக்கட்டடங்கள் பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெறும் வரையும் மூலமூர்த்தியைத் தற்காலிகமாகத் தாபித்துள்ள ஆலயம். இரண்டாவது. ஏற்கனவே மூர்த்திக்குப் பிரதிஷ்டை செய்துள்ள ஆலயங்களில், மேற்கூறியவாறு தாபனம் செய்வதற்கென அமைக்கப்பெற்ற ஆலயம். முதலாவது பாலாலத்தில் மூலாலயக் கட்டடங்கள் பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெறும் வரையும் சாதாரண உற்சவயங்கள் நடைபெறலாமென ஓர் சிறப்பு விதியுண்டு. இரண்டாவது பாலாலயத்தில் பாலஸ்தாபனத்திற்குப்பின் கும்பாபிஷேகம் நடைபெறும் வரைக்கும் எவ்வித உற்சவமும் நடைபெறக் கூடாது. ஸ்நமன அபிஷேகம் மாத்திரம் விஷேடமாகச் செய்யப்படலாம். ஆயிரத்தெட்டுச் சங்குகளைக் கொண்ட சங்காபிஷேகம் நடைபெறவேண்டிய தினத்தில் 108 சங்குகள் கூடிய அபிஷேகம் நடைபெறலாம். இவை யாவும் வேதசிவாகவங்களில் விற்பன்னர்களாயுள்ள சில சைவக்குருமார்களின் கருத்துக்களேயாம்.

அ. இ. வேதசிவாகமசபை

# சைவசமய சாத்திர ஆராய்ச்சி

(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

தோறுமிவ்வாறு மேற்பட்டு வந்தால் இப்பக்குவ முதிர்ச்சியால் சைவக்கூற்றின் முடிவாகிய சித்தாந்த சைவத்தையடைவர் என அருணந்தி சிவாச்சாரியார் சோபான முறைமை கூறியமை கண்டு தெரிக.

திருஞானசம்பந்தரும் வேத நெறியே சைவத்துறை என்றும் மிகுசைவத்துறை ஓங்கி வளர வேண்டுமென்றமையும், ''முத்தமிழ் வல்லவன்'' ''நான்மறை வல்லவன்'' ஞாலந்தான் பரவப்படுகின்ற நான்மறை யங்கமோதிய நாவன்'' அந்தணர் வேள்வியு மருமறைத்துழனியுஞ்' செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளந்தர'' அரவொளி யாகமங்ழறிவாரறி தோத்திரங்கள்.'' எனப் போற்றியுள்ளார். இவைபோன்றுநுண்ணிய கருத்துக்களை விளங்கினால் ஆரியமும் தமிழும் புறம்பானவை என்பது வீண் கற்பனையே. பூசைக்கு மந்திரம் அவசியமென்பதை யாரும் மறுக்க முடியாது. மூலாதாரத்திலிருந்து எழுவன மந்திர உச்சரிப்பென்றும் உந்தியிலிருந்தெழுவன பேச்சு மொழியான தோத்திரங்களென்றும் இலக்கணம் கூறுவதை நாம் கவனித்து மரபு கெடாமல் வாழ்வதே முதியோர் கட்டளையுமாகும்.

வேதங்களின் முடிவுகள் வைதிக சைவத்தையே தெளிவாக எடுத்துரைப்பனவாக விருப்ப குருவிச்சையானது நிழல் விருட்சத்தைத் தான் சுவீகரித்து முடிவில் அம்மரத்தையே பட வைப்பது போல ஒருசில சைவ சிகாமணிகள் தோன்றிச் சைவத்தையழித்து வருகிறார்கள். குருவிச்சையை வெட்டி விருட்சத்தைப் பாதுகாப்பதுபோல, போலிச் சைவர் கருத்துக்களை உடனுக்குடன் கண்டனம் செய்து களைந்தொதுக்கிச் சைவத்தைப் பேணுவோமாக.

பத்திராதிபர் ஸ்ரீ நா. கணேசலிங்கம் 'நாவலன் அகம்' இளவாலை. கந்தரோடையில் வசிக்கும் பிரமஸ்ரீ சி. கனகசபாபதி ஐயர் அவர்களால் சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் அச்சிடப்பெற்று இளவாலை ஸ்ரீலங்கா சைவாதீனத்தின் சார்பில் அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு த. சிவலிங்கம் J. P. அவர்களால் வெளியிடப்பெற்றது.